சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

# சுற்றுலா

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2019–2020

### மானியக் கோரிக்கை எண். 29


வெல்லமண்டி ந. நடராஜன்
சுற்றுலாத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2019

# சுற்றுலா

# மானியக் கோரிக்கை எண். 29

# 2019–2020ஆம் ஆண்டுக்கான

# கொள்கை விளக்கக் குறிப்பு

## பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | இந்தியாவில் சுற்றுலா | 2 |
| 3. | தமிழ்நாட்டில் சுற்றுலா | 4 |
| | ➢ சுற்றுலாத்துறையின் குறிக்கோள்கள் | 5 |
| | ➢ உத்திகள் | 6 |
| 4. | தமிழ்நாட்டைப் பார்வையிட்ட சுற்றுலாப் பயணிகள் | 8 |
| 5. | கண்காட்சிகள் மற்றும் விழாக்கள் | 9 |
| 6. | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணச் சந்தைகளில் பங்கேற்றல் | 12 |
| | அ) உள்நாட்டு பயணச் சந்தைகளில் பங்கேற்றல் | 12 |
| | ஆ) சர்வதேச பயணச் சந்தைகள்/ விளம்பர முகாம்கள் | 14 |
| | ➢ மலேசியாவின் லங்காவியில் ‘பாட்டா’ பயணச் சந்தை– 2018 | 15 |

| | | |
|---|---|---|
| | ➢ ‘ஜட்டா’ சுற்றுலா கண்காட்சி 2018, டோக்கியோ, ஜப்பான் | 16 |
| | ➢ பன்னாட்டு சுற்றுலாச் சந்தை (ஐடிபி), ஆசியா, சிங்கப்பூர் | 17 |
| | ➢ உலக சுற்றுலாச் சந்தை (WTM), லண்டன் | 18 |
| | ➢ ‘ஃபிட்டூர்’ பன்னாட்டு சுற்றுலா கண்காட்சி–2019, மாட்ரிட், ஸ்பெயின் | 19 |
| | ➢ பெர்லினில் சர்வதேச சுற்றுலாச் சந்தை–2019 | 19 |
| 7. | உலக சுற்றுலா தின கொண்டாட்டங்கள் | 20 |
| 8. | வழிகாட்டிப் பயிற்சி | 20 |
| 9. | பிரபலப்படுத்துதல் – விளம்பரம் | 21 |
| 10. | மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியல் நிறுவனம், துவாக்குடி, திருச்சிராப்பள்ளி | 23 |
| 11. | சுற்றுலாப் பாதுகாப்பு அமைப்பு | 25 |
| 12. | சுற்றுலா உள்கட்டமைப்பு<br>(I) மாநில அரசு நிதித் திட்டங்கள் | 27 |
| | ➢ 2018–2019 ஆம் ஆண்டிற்கான உள்கட்டமைப்பு வசதி திட்டங்கள் விவரம் | 28 |
| | ➢ 2018–2019 ஆம் ஆண்டிற்கான சாலை மேம்பாட்டுப் பணிகள் விவரம் | 29 |

| | | |
|---|---|---|
| | (II) மத்திய அரசு நிதி உதவித் திட்டங்கள்<br>➢ பிரசாத் திட்டம் (புனித யாத்திரை புத்தாக்கம் மற்றும் ஆன்மீகப் பெருக்கத் திட்டம்) | 30 |
| | ➢ சுதேஷ் தர்ஷன் திட்டம் | 30 |
| | ➢ சுவச்தா பக்வாடா (தூய்மை பேணும் முகாம்) | 32 |
| 13. | சுற்றுலா விருதுகள் | 32 |
| 14. | ஆசிய வளர்ச்சி வங்கி – சுற்றுலா உள்கட்டமைப்பு மேம்பாட்டு மூலதனத் திட்டம் (IDIPT) | 33 |
| 15. | மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகளை நிறைவேற்றுதல் | 33 |
| 16. | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் | 36 |
| | ➢ ஓட்டல்கள் பிரிவு | 37 |
| | ➢ படகு குழாம்கள் | 37 |
| | முட்டுக்காடு | 38 |
| | முதலியார்குப்பம் | 39 |
| | உதகமண்டலம் | 40 |
| | பைக்காரா | 41 |
| | கொடைக்கானல் | 41 |
| | ஏற்காடு | 42 |
| | பிச்சாவரம் | 43 |
| | குற்றாலம் | 43 |
| | ➢ தொலைநோக்கி இல்லம் | 44 |

| | | |
|---|---|---|
| | ➢ போக்குவரத்து பிரிவு | 45 |
| | ➢ பொருட்காட்சி பிரிவு | 46 |
| | ➢ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சந்தைப்படுத்தும் (விற்பனை) முயற்சிகள் | 48 |
| | ➢ விடுமுறைக் கால முன் வைப்புத்தொகை திட்டம் | 49 |
| | ➢ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மின்ஆளுமை முயற்சிகள் | 52 |
| | ➢ பங்கு ஈவுத்தொகை | 55 |
| 17. | முடிவுரை | 56 |
| 18. | இணைப்பு–1 : சுற்றுலாத்துறை நிருவாக அமைப்பு | 57 |
| 19. | இணைப்பு–2 : தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிருவாக அமைப்பு | 58 |
| 20. | இணைப்பு–3 : சுற்றுலா அலுவலகங்கள் | 59 |
| 21. | இணைப்பு–4 : சுற்றுலா தகவல் மையங்கள் | 60 |

# சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

## மானியக் கோரிக்கை எண். 29

## சுற்றுலா

## கொள்கை விளக்கக் குறிப்பு – 2019–2020

**முன்னுரை**

சுற்றுலா, சமுதாய வளர்ச்சிக்கு ஓர் உந்துகோலாகவும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு காரணியாகவும் திகழ்கிறது.

சுற்றுலாப் பயணிகளின் மனதிற்கு புத்துணர்ச்சியையும் மகிழ்ச்சியையும் ஓய்வையும் கேளிக்கையையும் மற்றும் புதிய அனுபவங்களையும் அளிக்கும் வகையில் சுற்றுலா திகழ்கிறது. விமான நிறுவனங்கள், இரயில்வே துறை, சாலைப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து, தங்கும் விடுதிகள், தொலைதூர தகவல் ஆகிய சுற்றுலா சார்ந்த பல்வேறு தொழில் முனைவோர்கள் சுற்றுலா மூலம் பொருளாதார மேம்பாட்டை அடைகின்றனர். மேற்கண்ட அனைத்துத் துறைகளின் வளர்ச்சிகளையும் சுற்றுலா உறுதி செய்கிறது.

உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிற்கோ ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு பயணம் மேற்கொள்வதை சுற்றுலா என பொதுவாக குறிப்பிடுவர். ஐக்கிய நாடுகள் உலக சுற்றுலா அமைப்பானது (UNWTO) "ஓய்வு, வியாபாரம் மற்றும் பிற காரணங்களுக்காக ஓராண்டிற்கு மிகாமல், தமது வழக்கமான சூழலிலிருந்து வேறு இடத்திற்கு பயணம் மேற்கொண்டு தங்கும் மக்களை சுற்றுலாப் பயணிகள்" என வரையறுத்துள்ளது.

தற்போது சுற்றுலா வாழ்க்கையின் ஒரு முக்கிய அங்கமாக உள்ளது. மேம்பட்ட சாலை இணைப்பு, தரமான சாலைகள், சுற்றுலாத் தலங்களை எளிதில் அணுகும் வசதி மற்றும் மின்னணு பரிவர்த்தனை ஆகியவை பயணத்தை எளிதாக்கியுள்ளன. சலிப்பூட்டும் பணிச்சூழல், இறுக்கமான வாழ்க்கைமுறை மற்றும் புதிய இடங்களைக் காண வேண்டும் என்கின்ற ஆவல் ஆகியவை சுற்றுலா மற்றும் பயணத்திற்கான தேவையை அதிகரித்துள்ளன.

**இந்தியாவில் சுற்றுலா**

2017ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு முதன்முறையாக 100 இலட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை

புரிந்துள்ளது இந்த ஆண்டின் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். 2016ஆம் ஆண்டைவிட 2017ஆம் ஆண்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை 14 சதவிகிதம் அதிகரித்துள்ளது. உலகளவில் சுற்றுலாப் பயணிகளின் வருகை சராசரியாக 6.8 சதவிகிதம் உயர்ந்துள்ளது. அந்நியச் செலாவணி வருவாயில் உலக அளவில் இந்தியா 7.5 சதவிகிதம் உயர்ந்துள்ளது. மேலும், இந்தியாவின் அந்நியச் செலாவணி, அமெரிக்க டாலர் மதிப்பில் 19.1 சதவிகிதம் உயர்ந்துள்ளது. 2017ஆம் ஆண்டில் அந்நியச் செலாவணி ஈட்டுவதில் உலகளவில் இந்தியா 13வது தர வரிசையில் உள்ளது. ஆசிய மற்றும் பசிபிக் வட்டாரத்தில், சுற்றுலா மூலம் ஈட்டப்பட்ட வருவாயின் அடிப்படையில் இந்தியா 7வது இடத்தில் உள்ளது. மேலும், 2017ஆம் ஆண்டில் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை 16,520 இலட்சத்தைக் கடந்துள்ளது.

நாட்டிலுள்ள பல்வேறு சுற்றுலா சார்ந்த பயணச் சுற்றுகளில், உள்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள மத்திய அரசின் சுற்றுலா அமைச்சகம் நிதி ஒப்பளிப்பு செய்கிறது. இந்தியாவில் சுற்றுலா அமைச்சகம் 'வியப்பூட்டும் இந்தியா' (Incredible India) என்ற

அடைமொழியினை முன் வைத்து சுற்றுலா மேம்பாட்டிற்கான பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறது.

**தமிழ்நாட்டில் சுற்றுலா**

இந்திய தீபகற்பத்தின் தென்கிழக்கு பகுதியில் தமிழ்நாடு அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் மிகவும் போற்றத்தக்க வகையில் கோயில் கட்டடக் கலைகள், உயிரோட்டமுள்ள பாரம்பரிய இசை, நடனம், கிராமியக்கலை மற்றும் கவின்கலை ஆகியவை உள்ளன. தமிழ்நாட்டிலுள்ள கோயில் நகரங்கள் மற்றும் பாரம்பரியத் தலங்கள், நினைவுச்சின்னங்கள், கோட்டைகள், மலைவாழிடங்கள், அருவிகள், தேசியப் பூங்காக்கள், கடற்கரைகள், உள்ளூர் உணவு வகைகள், இயற்கைச் சூழல் மற்றும் வன உயிரினங்கள் ஆகியன மிகவும் புகழ் பெற்றவை.

தமிழ்நாட்டில் யுனெஸ்கோவால் அறிவிக்கப்பட்ட ஐந்து உலகப் பாரம்பரியச் சின்னங்களான மாமல்லபுரம்—கடற்கரைக் கோயில், ஐந்து ரதங்கள், அர்ச்சுனன் தவம், தஞ்சாவூர்—பிரகதீசுவரர் திருக்கோயில், தாராசுரம்—ஐராவதீசுவரர் திருக்கோயில், கங்கைகொண்ட சோழபுரம்—பிரகதீசுவரர் திருக்கோயில் மற்றும் நீலகிரி மலை ரயில்

ஆகியவை இங்கு உள்ளன. நான்கு பன்னாட்டு விமான முனையங்களான சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் பெரிய துறைமுகங்களான சென்னை, தூத்துக்குடி ஆகியவை தமிழ்நாட்டினை, நாட்டின் பிற பகுதிகளுடனும் உலகில் உள்ள மற்ற பகுதிகளுடனும் தொடர்பை ஏற்படுத்துகின்றன. இங்கு அமைந்துள்ள சுற்றுலாத் தலங்களை இணைக்கும் சிறப்பான சாலை வசதிகள் சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். மேற்கூறிய அனைத்து வசதிகளும் தமிழ்நாட்டை, இந்தியாவிலேயே மிகவும் விரும்பத்தக்க சுற்றுலாத் தலமாக உருவாக்கியுள்ளன.

**சுற்றுலாத்துறையின் குறிக்கோள்கள்**

(அ) தமிழ்நாட்டினை, தேசிய மற்றும் உலகளவில் முன்னுரிமை பெற்ற ஒரு சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல்.

(ஆ) தமிழ்நாட்டில் கூடுதல் சுற்றுலா கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் ஏற்கெனவே உள்ள சுற்றுலா உள்கட்டமைப்பினை மேம்படுத்துதல்.

(இ) தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு உலகத் தரத்திலான சேவைகளை வழங்குதல்.

(ஈ) தொன்றுதொட்டு விளங்கும் வளமான மற்றும் பலவிதமான கலாச்சார பாரம்பரியம் மற்றும் நினைவுச் சின்னங்களின் கட்டடக்கலை சிறப்பு அம்சங்களை காட்சிப்படுத்துதல்.

(உ) அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களைக் கண்டறிந்து, அங்கு சுற்றுலாவினை மேம்படுத்துதல்.

(ஊ) சுற்றுலாத் தொழிலில், வேலைவாய்ப்புகளுக்கான வழிமுறைகளை உருவாக்குதல்.

(எ) நாட்டிற்காக அந்நியச் செலாவணியினை ஈட்டுதல்.

**உத்திகள்**

(அ) வளமான சுற்றுலாச் சுற்றுக்களில் ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு முன்னுரிமை அளித்து வளர்ச்சி அடையச் செய்தல்.

(ஆ) சுற்றுலாவில் தனியார் துறை முதலீட்டை ஊக்குவித்தல் மற்றும் உள்ளூர் மக்களின் பங்கேற்பு.

(இ) உள்நாட்டிலும் உலக அளவிலும் நடைபெறும் சுற்றுலாச் சந்தைகள், விளம்பர முகாம்கள் மற்றும் கண்காட்சிகளில் பங்குகொள்ளுதல்.

(ஈ) கடற்கரைச் சுற்றுலாவை வளர்ச்சி அடையச் செய்தல்.

**(உ)** பல்வேறு முகமைகளுடன் ஒருங்கிணைப்பை மேம்படுத்த முயற்சித்தல்**.**

**(ஊ)** மேம்படுத்தப்பட்ட இணைப்புச் சாலைகள், சுற்றுலா வசதிகள் மற்றும் சுற்றுலாச் சேவைகள் அளித்தல்**.**

**(எ)** சுற்றுலா சார்ந்த கூட்டங்கள், வணிகச் சுற்றுலா**,** மாநாடுகள், கண்காட்சிகள் ‘மைஸ் சுற்றுலா’ (MICE-Meetings, Incentives, Conventions, Exhibitions) மற்றும் தனித்துவம் வாய்ந்த சுற்றுலாக்களை (Niche Tourism) மேம்படுத்துதல்**.**

**(ஏ)** சுற்றுச்சூழல் மற்றும் பண்பாட்டுப் பாரம்பரியத்தை நிலைநிறுத்துதல் மற்றும் சமுதாய மேம்பாட்டை உள்ளடக்கிய சுற்றுலாவை வளர்த்தல்**.**

**(ஐ)** சுற்றுச்சூழல் மற்றும் வன உயிர்கள் பாதிக்காத வகையிலான சூழல்சார் சுற்றுலாவை மேம்படுத்துதல்**.**

**(ஒ)** திறன் வளர்ப்பு மற்றும் மனிதவள மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குதல், வேலைவாய்ப்பை உருவாக்குதல், வறுமை ஒழிப்பு, சுற்றுச்சூழல் மறு உருவாக்கம், மகளிர் மற்றும் நலிவுற்ற சமுதாய மேம்பாடு ஆகியவற்றின் மூலமாக நிலையான சுற்றுலாவை மேம்படுத்துதல்**.**

**தமிழ்நாட்டைப் பார்வையிட்ட சுற்றுலாப் பயணிகள்**

தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு சுற்றுலாத் தலங்களை பார்வையிட அதிக எண்ணிக்கையில் வெளிநாடு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். தமிழ்நாட்டிற்கு அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா, ரஷ்யா, ஜெர்மனி, சீனா, மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான், இத்தாலி, ஃபிரான்ஸ், இலங்கை, ஓமன் மற்றும் வங்கதேசம் ஆகிய நாடுகளிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் பெரும் பங்கு வகிக்கின்றனர்.

தமிழ்நாட்டினைப் பார்வையிட்ட சுற்றுலாப் பயணிகளின் விவரம் பின்வருமாறு:-

| ஆண்டு | உள்நாடு | வெளிநாடு | மொத்தம் |
|---|---|---|---|
| | (இலட்சத்தில்) | | |
| 2015 | 3334.59 | 46.85 | 3381.44 |
| 2016 | 3438.10 | 47.20 | 3485.30 |
| 2017 | 3450.61 | 48.60 | 3499.21 |
| 2018 | 3859.09 | 60.73 | 3919.82 |

2014, 2015, 2016, மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது. சிறப்பான விளம்பர யுக்தியை கையாண்டதாலும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் நடைபெற்ற சுற்றுலாச் சந்தைகளில் சுற்றுலா தொழில் முனைவோரை பங்குபெற செய்ததின் பயனாகவும் 2018ஆம் ஆண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமாக அதிகரித்துள்ளது.

**கண்காட்சிகள் மற்றும் விழாக்கள்**

தமிழ்நாட்டில், பண்டைய பாரம்பரிய கலாச்சாரத்தைக் கொண்ட பல்வேறு சுற்றுலாத் தலங்கள் உள்ளன. யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட மாமல்லபுரத்திலுள்ள பண்டைய நினைவுச்சின்னங்களான கடற்கரைக் கோயில், குகைக் கோயில், அர்ஜுனன் தவம் மற்றும் ஐந்து ரதங்கள் ஆகியவை பெருமை சேர்ப்பதால் மாமல்லபுரம் தமிழ்நாட்டின் பிரபலமான சுற்றுலாத் தலமாக விளங்குகிறது.

1992ஆம் ஆண்டு முதல், மாமல்லபுரத்தில் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் – ஜனவரி மாதங்களில் இந்திய நாட்டிய விழா நடத்தப்பட்டு வருகிறது. இவ்விழாவினைக் காண

இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்தும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் ஆயிரக்கணக்கில் வருகை புரிகின்றனர். 2018–2019ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்திய நாட்டிய விழாவை, சுமார் 1,30,000 உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும் 19,000 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் கண்டு மகிழ்ந்தனர்.

தமிழ்நாட்டில் கோடை காலங்களில் மலை வாசஸ்தலங்களில் உள்ள குளிர்ந்த தட்பவெப்ப சூழலை அனுபவிக்க உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி மற்றும் வால்பாறை போன்ற இடங்களுக்கு மக்கள் பயணித்து தங்குகின்றனர்.

மலை வாசஸ்தலங்களில் மக்கள் தங்கி, ஓய்வு எடுக்கும்போது அவர்களின் பொழுதுபோக்கிற்காக பாரம்பரிய நடனம் மற்றும் நாட்டுப்புறக் கலைகளை கோடை விழாவின் ஒரு பகுதியாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுகின்றன. மேலும், அங்கு விளையாட்டுப் போட்டிகளுடன் கூடிய பல்வேறு நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டின் பாரம்பரியம் மற்றும் பண்பாடு குறித்து சுற்றுலாப் பயணிகள் அறியும் வண்ணம் 2018–2019ஆம் ஆண்டில் பின்வரும் விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன:-

| விழா | மாதம் |
|---|---|
| பொங்கல் விழா | ஜனவரி |
| ஜல்லிக்கட்டு விழா, விராலிமலை, புதுக்கோட்டை மாவட்டம் | ஜனவரி |
| சித்திரை சுற்றுலா விழா, மதுரை | ஏப்ரல் |
| தேயிலை மற்றும் சுற்றுலா விழா, உதகமண்டலம் | மே |
| தியாகராஜ சுவாமி திருக்கோயில் தேர் திருவிழா, திருவாரூர் | மே |
| நெய்தல் கோடை விழா, நாகப்பட்டினம் | மே |
| குமரி கோடை கலை விழா, கன்னியாகுமரி | மே |
| கோடை விழா, கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி | மே |
| கோடை விழா, உதகமண்டலம் | மே – ஜூன் |
| கோடை விழா, ஜவ்வாது மலை | ஜூன் |
| மாங்கனி விழா, கிருஷ்ணகிரி | ஜூன் |
| கோடை விழா, கல்வராயன்மலை, விழுப்புரம் | ஜூலை |
| குறிஞ்சி விழா, கொடைக்கானல் | ஜூலை –ஆகஸ்ட் |
| சாரல் திருவிழா, குற்றாலம் | ஜூலை –ஆகஸ்ட் |
| வல்வில் ஓரி விழா, கொல்லிமலை | ஜூலை –ஆகஸ்ட் |
| ஆடிப்பெருக்கு விழா, ஒகேனக்கல் | ஆகஸ்ட் |
| சுருளி  சாரல் விழா,  தேனி மாவட்டம் | ஆகஸ்ட்–செப்டம்பர் |
| உலக சுற்றுலா தினவிழா | செப்டம்பர் |
| மன்னர் ராஜ ராஜ சோழன் சதய விழா, தஞ்சாவூர் | அக்டோபர் |
| இந்திய நாட்டிய விழா, மாமல்லபுரம் | டிசம்பர் – ஜனவரி |

தமிழ்நாட்டின் சுற்றுலா வளங்கள், சுற்றுலா நிகழ்வுகள் மற்றும் சுற்றுலாத் திட்டங்களை பொதுமக்களிடையே காட்சிப்படுத்தும் வகையில் மதுரை, கோயம்புத்தூர், கடலூர், திருநெல்வேலி, கரூர், சேலம், புதுக்கோட்டை, தேனி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற அரசு பொருட்காட்சிகளில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை பங்கேற்றது.

**உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணச் சந்தைகளில் பங்கேற்றல்**

தமிழ்நாட்டை மிகவும் விரும்பத்தக்க சுற்றுலாத் தலமாக உருவாக்கவும் தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கவும் தமிழ்நாடு சுற்றுலாத்துறை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணச் சந்தைகளில் பங்கேற்கிறது.

**அ) உள்நாட்டு பயணச் சந்தைகளில் பங்கேற்றல்**

உலகத்தரம் வாய்ந்த சுற்றுலாத் தலமாக தமிழ்நாட்டை வலியுறுத்தும் நோக்கத்துடனும் உள்நாட்டு சுற்றுலாவில் கவனம் செலுத்தவும் வணிகக் கூட்டங்கள் மூலம் தமிழ்நாடு சுற்றுலாத்துறை உள்நாட்டு பயணச் சந்தைகளில் பங்கேற்கிறது. இங்கு நடைபெறும் வாங்குவோர்–விற்போர்

சந்திப்புகள் நமது மாநிலத்தை காட்சிப்படுத்த வாய்ப்பாக அமைகின்றன.

தமிழகத்தின் சுற்றுலா வளங்களை வெளிப்படுத்த, பிற மாநில சுற்றுலாத் துறைகள் மற்றும் புகழ்பெற்ற சுற்றுலா நிறுவனங்களால் நடத்தப்படும் சுற்றுலாச் சந்தைகள் மற்றும் சுற்றுலா கண்காட்சிகளில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை பங்கேற்கிறது.

**2018–2019ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறை பங்கேற்ற உள்நாட்டு சுற்றுலாச் சந்தைகள் மற்றும் நிகழ்ச்சிகள்**

| உள்நாட்டு சுற்றுலாச் சந்தைகள் / நிகழ்ச்சிகள் | மாதம் |
|---|---|
| தொடர் விளம்பர நிகழ்ச்சிகள், ஐதராபாத் | ஜூலை-2018 |
| சர்வதேச இந்திய பயணச் சந்தை (IITM), பெங்களூர் மற்றும் சென்னை | ஜூலை – ஆகஸ்ட் -2018 |
| பயண மற்றும் சுற்றுலாக் கண்காட்சி (TTF), கொல்கத்தா, ஐதராபாத், அகமதாபாத் | ஜூலை – செப்டம்பர்-2018 |
| இந்திய பயண ஏற்பாட்டாளர்கள் சங்க வருடாந்திர மாநாடு, விசாகப்பட்டினம் | செப்டம்பர்-2018 |
| இந்திய உலக பயணச்சந்தை (IGTM), புதுதில்லி | செப்டம்பர்-2018 |
| சுற்றுலா விழா (பர்யாதன் பர்வ்), புதுதில்லி | செப்டம்பர்-2018 |
| இந்திய பன்னாட்டு வர்த்தக கண்காட்சி (IITF), பிரகதி மைதானம், புதுதில்லி | நவம்பர்-2018 |

| | |
|---|---|
| சாகச பயண வர்த்தக சங்கம் (ATTA Adventure Next), போபால் | டிசம்பர்-2018 |
| தெற்காசிய பயண மற்றும் சுற்றுலா பரிமாற்றம் (SATTE), கிரேட்டர் நொய்டா, புதுதில்லி | ஜனவரி-2019 |
| குடியரசு தின விழா கொண்டாட்டம், புதுதில்லி | ஜனவரி-2019 |
| 45–வது இந்திய சுற்றுலா தொழில் பொருட்காட்சி, தீவுத்திடல், சென்னை | ஜனவரி – மார்ச்-2019 |
| சென்னை அறிவியல் விழா, அறிவியல் நகரம், சென்னை | பிப்ரவரி-2019 |
| கிரேட் இந்தியா பயணச்சந்தை (GITB), ஜெய்ப்பூர் | ஏப்ரல்-2019 |

## ஆ) சர்வதேச பயணச் சந்தைகள் / விளம்பர முகாம்கள்

தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு சுற்றுலாத் தலங்களை விளம்பரப்படுத்துவதற்காக, சர்வதேச சுற்றுலாச் சந்தைகளில் சுற்றுலாத்துறை பங்கேற்று வருகிறது. தங்கும் விடுதிகள், பயண ஏற்பாட்டாளர்கள், உடல்நலம் பேணும் தொழில் சார்ந்தோர் ஆகியோர் இச்சந்தைகளில் தமிழ்நாடு சுற்றுலா அரங்கில் ஆர்வமுடன் பங்குபெறுகின்றனர். இதனால் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. 2018–2019 ஆம் ஆண்டில், சுற்றுலாத்துறை பின்வரும் சர்வதேச பயணச் சந்தைகள் மற்றும் சுற்றுலாக் கண்காட்சிகளில் பங்கேற்றது:–

| மாதம் மற்றும் வருடம் | சர்வதேச பயணச் சந்தையின் விவரம் |
|---|---|
| செப்டம்பர் 2018 | பசிபிக் ஆசிய பயண முகவர்கள் பயணச் சந்தை (பாட்டா) லங்காவி, மலேசியா. |
| செப்டம்பர் 2018 | ஜப்பான் பயண முகவர்கள் சங்கம் (ஜட்டா) சுற்றுலா கண்காட்சி, டோக்கியோ, ஜப்பான். |
| அக்டோபர் 2018 | பன்னாட்டு சுற்றுலாச் சந்தை, (ஐடிபி), ஆசியா, சிங்கப்பூர். |
| நவம்பர் 201 8 | உலக சுற்றுலாச் சந்தை (டபிள்யு.டி.எம்.), லண்டன். |
| ஜனவரி 2019 | ஃபிட்டூர் பன்னாட்டு சுற்றுலாத் தொழில் கண்காட்சி, மாட்ரிட், ஸ்பெயின். |
| மார்ச் 2019 | சர்வதேச சுற்றுலாச் சந்தை (ஐடிபி), பெர்லின், ஜெர்மனி. |

## மலேசியாவின் லங்காவியில் ‘பாட்டா’ பயணச் சந்தை – 2018

ஒவ்வோர் ஆண்டும் பசுபிக் ஆசிய நாடுகள் ஏதேனும் ஒன்றில் மிகப்பெரிய சர்வதேச பயணச் சந்தைகளில் ஒன்றான ‘பாட்டா’ நடைபெறுகிறது. **2018–**ம் ஆண்டு செப்டம்பர் மாதம் மலேசியாவில் உள்ள லங்காவி தீவில் நடைபெற்ற சுற்றுலாச் சந்தையில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு சுற்றுலாத் துறையின்

அரங்கில், தமிழ்நாட்டின் சுற்றுலா வளங்கள் குறித்த காட்சிப் படங்கள் அலங்கரிக்கப்பட்டன. ‘பாட்டா’ சுற்றுலாச் சந்தையில் **53** நாடுகளின் ‘சுற்றுலா தொழில் சார்ந்தோர்’ பங்கேற்றனர். தமிழகத்திலிருந்து ஏழு சுற்றுலா தொழில் புரிவோர் தமிழ்நாடு சுற்றுலாத் துறையுடன் இணைந்து பங்கேற்றனர். இந்த பயணச் சந்தையில் பங்கேற்றதால், மலேசியா மற்றும் அருகிலுள்ள நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் அவர்கள் தமிழ்நாட்டில் தங்குதலும் அதிகரிக்கும்.

**‘ஜட்டா’ சுற்றுலா கண்காட்சி 2018, டோக்கியோ, ஜப்பான்**

‘ஜட்டா’ சுற்றுலாக் கண்காட்சி, உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலாத் தொழில்புரிவோர்களுக்கு இடையே வர்த்தக வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் விரிவான சுற்றுலா நிகழ்வு ஆகும். ‘ஜட்டா’ சுற்றுலாப் பயணக் கண்காட்சியில், **136** நாடுகளைச் சேர்ந்த சுற்றுலா, விருந்தோம்பல் தொழில் சார்ந்தோர் மற்றும் அரசுத் துறைகள் டோக்கியோ நகரில் கூடி, தமது நாட்டின் சுற்றுலாத் தலங்கள் மற்றும் சேவைகள் குறித்து விளம்பரப்படுத்தினர்.

‘ஜட்டா’ சுற்றுலா கண்காட்சியில் தமிழ்நாட்டிலிருந்து ஐந்து சுற்றுலா தொழில்புரிவோர் பங்கேற்றனர். அவர்கள் தமது தொழிலை சந்தைப்படுத்துவதற்காக, ‘ஜட்டா’ சுற்றுலா கண்காட்சியில் சுற்றுலாத் துறையுடன் இணைந்து பங்கேற்றனர். ஜப்பானிலிருந்து பல்வேறு பயண முகவர்கள், பயண ஏற்பாட்டாளர்கள், பயண எழுத்தாளர்கள், அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் சார்ந்தோர், தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் அரங்கிற்கு வருகை புரிந்தனர். அவர்களுக்கு தமிழ்நாட்டின் மிகுதியான சுற்றுலா வளங்கள் குறித்து விளக்கப்பட்டது. தமிழ்நாட்டின் முக்கியமான சுற்றுலாத் தலங்கள் குறித்து ஜப்பான் மொழியில் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்ட கையேடுகள் அவர்களின் பாராட்டை பெற்றது.

**பன்னாட்டு சுற்றுலாச் சந்தை (ஐடிபி), ஆசியா, சிங்கப்பூர்**

சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய பன்னாட்டு சுற்றுலாச் சந்தை, ‘மைஸ்’ எனப்படும் கூட்டங்கள், வணிகச் சுற்றுலா, மாநாடுகள், கண்காட்சிகள் (MICE – Meetings, Incentives, Conventions, Exhibitions), ஓய்வு மற்றும் வர்த்தகப் பயணத்தை காட்சிப்படுத்தியது. இந்த சந்தையில் ஆசியா,

மத்திய கிழக்கு நாடுகள், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து பங்கு கொண்டனர். இச்சந்தையில் 127 நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான காட்சியாளர்கள் பங்கு கொண்டனர். விடுதியாளர்கள், பயண முகவர்கள், போக்குவரத்து பயண ஏற்பாட்டாளர்கள் மற்றும் உடல்நலம் பேணும் சுற்றுலா அமைப்பாளர்கள் என எட்டு சுற்றுலா தொழில்புரிவோர் மிகுந்த ஆர்வத்தோடு தமிழ்நாடு சுற்றுலாத் துறையுடன் கலந்து கொண்டு தமது வர்த்தகத்தை பெரிதளவில் விளம்பரப்படுத்தினர்.

**உலக சுற்றுலாச் சந்தை (WTM), லண்டன்**

இந்த உலக சுற்றுலாச் சந்தையில் 127 நாடுகள் பங்கேற்றன. தமிழ்நாட்டிலிருந்து விடுதியாளர்கள் மற்றும் ஒருங்கிணைந்த சுற்றுலாத் தல மேலாண்மை நிறுவனத்தைச் சேர்ந்த எட்டு சுற்றுலா தொழில்புரிவோர் தமிழ்நாடு சுற்றுலாத் துறையுடன் இணைந்து பங்கேற்றனர். தமிழ்நாடு சுற்றுலா அரங்கிற்கு வருகை புரிந்த முன்னணி பயண ஏற்பாட்டாளர்கள், பயண முகவர்கள், தொழிலதிபர்கள், கப்பல் பயண ஏற்பாட்டாளர்கள், பயண எழுத்தாளர்கள் மற்றும்

விடுதியாளர்கள் மிகுந்த ஆர்வத்துடன் தமிழ்நாட்டின் சுற்றுலா தொழில்புரிவோருடன் கலந்துரையாடினார்கள்.

## ‘ஃபிட்டூர்’ (FITUR) பன்னாட்டு சுற்றுலா கண்காட்சி–2019, மாட்ரிட், ஸ்பெயின்

2019ஆம் ஆண்டில் நடைபெற்ற ‘ஃபிட்டூர்’ பன்னாட்டு சுற்றுலாத் தொழில் கண்காட்சியில் 176 நாடுகளிலிருந்து சுற்றுலாத் தொழில்புரிவோர் பங்கேற்றனர். தமிழகத்தைச் சார்ந்த மூன்று சுற்றுலாத் தொழில்புரிவோர், தமிழ்நாடு சுற்றுலாத் துறையுடன் இணைந்து இக்கண்காட்சியில் பங்கேற்றனர். இத்தகைய பன்னாட்டு பயணச் சந்தைகளில் கலந்து கொள்வதால், ஸ்பெயின் மற்றும் இதர நாடுகளிலிருந்து தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

## பெர்லினில் சர்வதேச சுற்றுலாச் சந்தை–2019

2019ஆம் ஆண்டில் நடைபெற்ற பெர்லின் சர்வதேச சுற்றுலாச் சந்தையில் 180 நாடுகள் பங்கேற்றன. தமிழகத்திலிருந்து பயண முகவர்கள், பயண ஏற்பாட்டாளர்கள், விடுதியாளர்கள், உடல்நலம் பேணும் சுற்றுலா அமைப்பாளர்கள்

போன்ற பதினோரு சுற்றுலாத் தொழில்புரிவோர் தமிழ்நாடு சுற்றுலாத்துறை அரங்கில் பங்கேற்றனர்.

**உலக சுற்றுலா தின கொண்டாட்டங்கள்**

சுற்றுலா மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை உருவாக்கும் நோக்கத்துடன், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உலக சுற்றுலா தினம் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 27 அன்று கொண்டாடப்படுகிறது. மதுரையில் 26.09.2018 மற்றும் 27.09.2018 ஆகிய நாட்களில் மாநில அளவிலான உலக சுற்றுலா தின விழா கொண்டாடப்பட்டது. மீனாட்சி அம்மன் கோயிலைச் சுற்றி தூய்மை பிரச்சாரம், சுற்றுலா விழிப்புணர்வு பேரணி, கலை நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகள் இரண்டு நாட்களுக்கு நடத்தப்பட்டன.

**வழிகாட்டிப் பயிற்சி**

சுற்றுலா மேம்பாட்டில் வழிகாட்டிகள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அவர்கள் மாநிலம் மற்றும் நாட்டின் நற்பெயரைக் காப்பதற்கும் சரியான தகவல்களை அளிப்பதற்கும் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் நலன்களைப்

பாதுகாத்து, அவர்கள் சுற்றுலாத் தலங்களில் மனநிறைவோடு தங்கிச் செல்ல ஏற்பாடுகள் செய்ய துணைபுரிகிறார்கள். அவர்களுடைய அறிவு, திறன் மற்றும் தகுதியினை மேம்படுத்தி சுற்றுலாப் பயணிகளுக்கு தரமான சேவையாற்றும் வகையில் வழிகாட்டிப் பயிற்சி நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பிரபலப்படுத்துதல் – விளம்பரம்**

தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா வளங்களை சரியான முறையில் பிரபலப்படுத்தி, சுற்றுலா சார்ந்த முன்னணி இதழ்கள், முக்கிய பத்திரிகைகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமானங்களின் பயண இதழ்கள் ஆகியவற்றில் சுற்றுலாத்துறை ஆண்டு முழுவதும் விளம்பரங்களை வெளியிட்டு வருகிறது. விமான நிலையங்கள் மற்றும் இரயில் நிலையங்களில் புதிய விளம்பர யுக்தியாக மின்னணு விளம்பரத்தை வெளியிடும் முயற்சிகளில் இத்துறை ஈடுபட்டுள்ளது.

அதற்கேற்ப பன்னாட்டு இதழ்கள் மற்றும் பன்னாட்டு விமானங்களில் வழங்கப்படும் இதழ்களான காண்டி நாஸ்ட் டிராவலர், டிராவல் + லீசர் (இந்தியா மற்றும் தெற்காசியா), இண்டெஸ் (பிரெஞ்சு), ஜெட் விங்ஸ் இண்டர்நேஷனல்

(ஜெட் ஏர்வேஸ்), ஸ்பைஸ் ரூட் (ஸ்பைஸ் ஜெட் ஏர்வேஸ்), தேசிய மற்றும் பன்னாட்டு விமான இதழ்கள், கல்ஃப் ஏர், டிஜிட்டல் டூரிசம் மேகசின் (டிராவல் அண்டு டூர் வேர்ல்டு) ஆகியவற்றில் விளம்பரங்கள் வெளியிடப் படுகின்றன.

உள்நாட்டு விமான இதழ்கள் மற்றும் பயண இதழ்களான ஜெட் விங்ஸ் (ஜெட் ஏர்வேஸ்), சுப யாத்ரா (ஏர் இந்தியா), அவுட்லுக், அவுட்லுக் பிசினஸ், அவுட்லுக் டிராவலர், வுமன்ஸ் இரா (ஹிந்தி), கிருகலஷ்மி, டிராவல் ஹைட்ஸ், சுவர் சரிதா, கிருக ஷோபா, தி வீக், லோன்லி பிளானட், நேஷனல் ஜியாகரபிக் டிராவலர் (இந்தியா), டிராவல் ஸ்கேப்ஸ், அபியான் (குஜராத்தி) ஆகியவற்றில் விளம்பரங்கள் வெளியிடப் படுகின்றன.

மின்னணு ஊடகம் வாயிலாக வெளியிடப்படும் விளம்பரங்கள் சுற்றுலா வளர்ச்சியில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகப்படுத்த உதவி புரிகின்றன. சுற்றுலாத்துறையில் கையாளப்படும் விளம்பர யுக்திகள், தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையினை அதிகரிக்க பெரிதும் உதவுகின்றன.

ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் வெளியிடப்பட்ட சுற்றுலா கையேடுகளான ‘டிஸ்கவர் தமிழ்நாடு’, ‘சுற்றுலா கடவுச்சீட்டு புத்தகம்’, ‘தமிழ்நாடு சுற்றுலா வரைபடம்’ ஆகியவை ஜப்பானிய, ஃப்ரெஞ்சு, ஜெர்மனி, ஸ்பானிஷ் மற்றும் சீன மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாச் சந்தைகளில் கலந்துகொள்ளும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் சுற்றுலாத் தொழில்புரிவோருக்கும் விநியோகிக்கப்பட்டன. தமிழ்நாடு சுற்றுலா பற்றிய குறும்படங்கள் குறும் பதிவியில் (Pen Drive) பதிவிடப்பட்டு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாச் சந்தைகளில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை அரங்கினை பார்வையிட வந்தவர்களுக்கு வழங்கப்பட்டன.

**மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியல் நிறுவனம், துவாக்குடி, திருச்சிராப்பள்ளி.**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடியில் உள்ள உணவு கைவினைத் தொழில் நிறுவனம் என அழைக்கப்பட்ட மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியல் நிறுவனம் **01–10–1981** அன்று இந்திய அரசால் நிறுவப்பட்டது. இது **1975** ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இந்நிறுவனம் இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு உதவியுடன் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த உணவு கைவினைத் தொழில் நிறுவனம் **15.12.1998** அன்று மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியல் நிறுவனமாக தரம் உயர்த்தப்பட்டது. இந்த நிறுவனத்தை, உத்திரப்பிரதேச மாநிலம் நொய்டாவில் உள்ள உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியலுக்கான நிறுவனங்களின் தேசிய குழு (NIHMCT) ஓர் உறுப்பு நிறுவனமாக சேர்த்துக் கொண்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடியில் உள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில், உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பம் குறித்த மூன்று ஆண்டு பட்டப்படிப்பு நடத்தப்படுகிறது. மேலும் இங்கு உணவு தயாரிப்பு, உணவு மற்றும் பானங்கள் பரிமாறுதல், தங்குமிடம் பராமரிப்பு, அடுமனைப் பொருட்கள் மற்றும் தின்பண்டங்கள் செய்தல் ஆகியவற்றில் ஒன்றரை ஆண்டு பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளும் நடத்தப்படுகின்றன.

மேலும், மத்திய அரசின் 'ஹுனார் சே ரோஜ்கார்' திட்டத்தின்கீழ் முழுநேர மற்றும் குறுகியகாலப் பயிற்சிகளும் நடத்தப்படுகின்றன.

இந்நிறுவனத்தின் அவசியச் செலவினங்களான பராமரிப்பு, மின் கட்டணம், குடிநீர் கட்டணம், தொலைபேசிக் கட்டணம் போன்றவற்றிற்காக, ஒவ்வோர் ஆண்டும் தொடர் மானியமாக ரூ.5.00 இலட்சம் மாநில அரசால் இந்நிறுவனத்திற்கு வழங்கப்படுகிறது.

**சுற்றுலாப் பாதுகாப்பு அமைப்பு**

சுற்றுலாத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் சுற்றுலாப் பாதுகாப்பு அமைப்பு சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான உதவிகள் செய்வதை தமது இன்றியமையாதப் பணியாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. சுற்றுலாத் தலத்திற்கு அச்சமின்றி சுற்றுலாப் பயணிகள் செல்வதற்கு பாதுகாப்பு மற்றும் அமைதியான சூழல் ஆகியவை முக்கிய காரணிகளாகும்.

இந்த அமைப்பு, தமிழ்நாட்டில் 2010ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, ஐந்து சுற்றுலாத் தலங்களில் முறையே

மாமல்லபுரம், உதகமண்டலம், கொடைக்கானல், இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரி ஆகியவற்றில் செயல்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட சுற்றுலாத் தலங்களில் ஒரு நிலைய சுற்றுலாப் பாதுகாவலரும், ஐந்து சுற்றுலாப் பாதுகாவலர்களும் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், ஒரு முதன்மை சுற்றுலாப் பாதுகாவலர் பதவி உருவாக்கப்பட்டு சென்னை சுற்றுலா ஆணையரகத்தில் பணிபுரிந்து வருகிறார். ஆக மொத்தம் 31 நபர்கள் சுற்றுலாப் பாதுகாப்பு அமைப்பில் உள்ளனர்.

தமிழ்நாட்டிற்கு வருகை தரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு, அமைதியான சூழல் ஆகியவற்றை உறுதி செய்வதன் மூலம் சுற்றுலாப் பயணிகளிடையே நம்பிக்கை ஏற்படுத்தி சுற்றுலாவை தமிழ்நாடு வளர்த்து வருகிறது.

இந்த அமைப்பின் நோக்கங்கள்

- வசதியான பயணத்தினை உறுதி செய்தல்.
- வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு முடிந்தவரை அவர்களின் தாய் மொழியில் தகவல் பரிமாறுதல்.

- சுற்றுலாத் தலங்களை காண்பதற்கு தேவையான தகவல்களையும் வழிகாட்டுதல்களையும் வழங்குதல்.
- நெரிசல் காரணமாக அல்லது புதிதாக வருகை தரும் இடத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்படும் எதிர்பாராத தேவைகளுக்கு உதவி செய்தல்.

சுற்றுலாப் பாதுகாப்பு அமைப்பின் இச்செயல்பாடு, தற்போது வெளிநாடு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள், காவல்துறை மற்றும் பொது மக்களின் பாராட்டைப் பெற்றுள்ளது.

**சுற்றுலா உள்கட்டமைப்பு**

**(III) மாநில அரசு நிதித் திட்டங்கள்**

தமிழகத்திற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில், தமிழகத்தின் முக்கிய சுற்றுலாத் தலங்களில் சுற்றுலா அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக சுற்றுலாத்துறை மூலம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு வருகிறது. இதன் மூலம் முக்கியப் பணிகளான ஓய்வுக்கூடங்கள், கழிவறைகள், அணுகு சாலைகள், உடை மாற்றும் அறைகள், வாகன நிறுத்தும் இடங்கள், குடிநீர் வசதி, மின் விளக்கு வசதி, வழிகாட்டிப் பலகைகள் நிறுவுதல் போன்றவை சுற்றுலாத் தலங்களில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

## 2018–2019ஆம் ஆண்டிற்கான உள்கட்டமைப்பு வசதி திட்டங்கள் விவரம்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் ஊராட்சி ஒன்றியம் தெற்கு கள்ளிகுளம் பரிசுத்த அதிசய பனிமய மாதா ஆலயம், விஜயாபதி விஸ்வாமித்திரர் ஆலயம், உவரி கப்பல் மாதா ஆலயம் மற்றும் திருவம்பலாபுரம் ஆத்தங்கரை பள்ளிவாசல் ஷேக் முகம்மது செய்யது அலி பாத்திமா பள்ளிவாசல் ஆகிய இடங்களில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல் | **106.50** |
| 2. | பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், தொண்டமாந்துறை கிராமம் விஸ்வக்குடி அருகே கல்லாற்றின் குறுக்கே அமைந்துள்ள விஸ்வக்குடி அணைக்கட்டுப் பகுதியில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளுதல். | **200.00** |
| 3. | நாமக்கல் மாவட்டம், நைனாமலை வரதராஜ பெருமாள் திருக்கோயிலில் சுற்றுலா அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல். | **321.53** |
| | **மொத்தம்** | **628.03** |

## 2018–2019 ஆம் ஆண்டிற்கான சாலை மேம்பாட்டுப் பணிகள் விவரம்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள உவரி ஊராட்சி கப்பல் மாதா கோயில் முதல் அந்தோணியார் கோயில் வரை தார் சாலை அமைத்தல், தெற்கு கள்ளிகுளம் ஊராட்சி பரிசுத்த அதிசய பனிமய மாதா மலைக் கோயில் சுற்றிலும் ரத வீதிகளில் தார் சாலை அமைத்தல் மற்றும் அதிசய பனிமய மாதா நகரில் தார் சாலை அமைத்தல். | **92.39** |
| 2. | நாமக்கல் மாவட்டம், நைனாமலை வரதராஜ பெருமாள் திருக்கோயிலில் மலைப்பாதை வசதிகள் மேற்கொள்ளுதல். | **398.02** |
| 3. | புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதி, விராலிமலை அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் மலைப்பாதை அமைத்தல். | **380.00** |
| 4. | திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், மேலூர் கிராமத்தில் உள்ள வண்ணத்துப்பூச்சி பூங்காவிற்கு செல்லும் அணுகுசாலையை மேம்பாடு செய்தல். | **193.58** |
| | **மொத்தம்** | **1063.99** |

## (IV) மத்திய அரசு நிதி உதவித் திட்டங்கள்

### பிரசாத் திட்டம் (புனித யாத்திரை புத்தாக்கம் மற்றும் ஆன்மீகப் பெருக்கத் திட்டம்)

மத்திய அரசின் சுற்றுலா அமைச்சகம், புனித யாத்திரை புத்தாக்கம் மற்றும் ஆன்மீக பெருக்கத் திட்டத்தின்கீழ் **(பிரசாத் திட்டம்)**, காஞ்சிபுரம் மேம்பாட்டிற்காக ரூ.**1,647.67** இலட்சமும், வேளாங்கண்ணி மேம்பாட்டிற்காக ரூ.**560.08** இலட்சமும் ஒப்பளிப்பு செய்து, அதில் காஞ்சிபுரம் மேம்பாட்டிற்காக முதல் தவணைத் தொகையாக ரூ.**329.53** இலட்சமும், இரண்டாவது தவணைத் தொகையாக ரூ.**494.30** இலட்சமும் (மொத்தம் ரூ.**823.83** இலட்சம்) விடுவித்துள்ளது. மேலும், வேளாங்கண்ணி மேம்பாட்டிற்காக முதல் தவணைத் தொகையாக ரூ.**112.01** இலட்சமும், இரண்டாவது தவணைத் தொகையாக ரூ.**147.04** இலட்சமும் (மொத்தம் ரூ.**259.05** இலட்சம்) விடுவித்துள்ளது. இப்பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

### சுதேஷ் தர்ஷன் திட்டம்

மத்திய அரசின் சுற்றுலா அமைச்சகம், அனைத்து தொழில்புரிவோர் வளமான சுற்றுலா அனுபவத்தைப் பெறவும்,

வேலைவாய்ப்பை மேம்படுத்தவும் கருப்பொருள் சார்ந்த சுற்றுலா சுற்றுக்களை மேம்படுத்தும் நோக்கத்தோடும் 'சுதேஷ் தர்ஷன்' திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள முக்கிய கடற்கரைச் சுற்றுலாத் தலங்களான 1. சென்னை–மெரினா கடற்கரை, பெசன்ட் நகர் கடற்கரை 2. மாமல்லபுரம் கடற்கரை 3. இராமேஸ்வரம் கடற்கரை 4. குலசேகரப்பட்டினம் 5. கன்னியாகுமரி ஆகிய இடங்களை தேர்ந்தெடுத்து அவற்றை மேம்படுத்த ரூ.99.91 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, அதில் ரூ.49.96 கோடி மத்திய அரசு சுற்றுலா அமைச்சகத்தால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நிலச்சீரமைப்பு, மின் விளக்கு வசதி, பொது கழிப்பிடங்கள், சாலையோர வசதிகள், கண்காணிப்பு கோபுரங்கள், நடைபாதை மேம்பாடு, கடற்கரை முகப்பு பகுதிகள் மேம்பாடு, மீட்புப் படகுகள், கடற்கரையில் செல்லும் வாகனங்கள் (Beach Buggies), ஜெட்ஸ்கி படகு (Jetski), அதிவேகப் படகு (Ampicraft), அருகலை (Wi-Fi), கண்காணிப்பு கேமரா பொருத்துதல், தகவல் பலகைகள் அமைத்தல், முதலுதவி வசதிகள் ஏற்படுத்துதல் போன்ற பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

**சுவச்தா பக்வாடா (தூய்மை பேணும் முகாம்)**

மத்திய அரசின் 'சுவச்தா பக்வாடா' முகாம் மூலம், சுற்றுலாத்துறை தமிழ்நாட்டிலுள்ள 32 மாவட்டங்களிலும் தூய்மை பேணும் முகாம்களை நடத்தியது. இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா ரூ.10,000 வீதம் மொத்தம் ரூ.3.20 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

**சுற்றுலா விருதுகள்**

தமிழ்நாடு சுற்றுலாத்துறை 2018–2019 ஆம் ஆண்டில் இரண்டு விருதுகளைப் பெற்றுள்ளது.

பட்வா (பசிபிக் பகுதி பயண எழுத்தாளர்கள் சங்கம்) 'சிறந்த பாரம்பரிய சுற்றுலா மாநிலம்' என்ற சர்வதேச பயண விருதை தமிழ்நாடு மாநிலத்திற்கு வழங்கியது. இந்த விருது 2019ஆம் ஆண்டு மார்ச் 7 அன்று ஜெர்மனியில் பெர்லின் நகரில் நடைபெற்ற சர்வதேச சுற்றுலாச் சந்தையில் வழங்கப்பட்டது. 'இந்தியா டுடே' குழுமம் 2018ஆம் ஆண்டில் 'சுற்றுலாவில் சிறந்த செயல்திறன்மிக்க மாநிலம்' என தமிழ்நாட்டை தேர்வு செய்து வழங்கிய விருதினை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 22.11.2018 அன்று புதுதில்லியில் பெற்றுக்கொண்டார்.

## ஆசிய வளர்ச்சி வங்கி – சுற்றுலா உள்கட்டமைப்பு மேம்பாட்டு மூலதனத்திட்டம் (IDIPT)

ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் சுற்றுலா உள்கட்டமைப்பு மேம்பாட்டு மூலதனத் திட்டம், தொகுதி–4–ன் கீழ், ரூ.288 கோடி மதிப்பீட்டில் பொருட்கள் மற்றும் பணிகளை உள்ளடக்கிய 14 தொகுப்புப் பணிகள் தயாரிக்கப்பட்டன. இதில் 10 தொகுப்புப் பணிகளுக்கான ஒப்பந்தங்கள் முடிவுசெய்யப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளன. எஞ்சிய 4 தொகுப்புப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

## மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் 2018–2019ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின் போது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்த அறிவிப்புகளை நிறைவேற்றுதல்

தமிழ்நாட்டிலுள்ள 32 மாவட்டங்களிலும் உள்ள பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க உள்ளூர் சுற்றுலா மையங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த, ஒருநாள் விழிப்புணர்வுச் சுற்றுலா ரூ.64.00 இலட்சம் செலவில்

சுற்றுலாத்துறை சார்பில் நடத்தப்பட்டது. இந்த விழிப்புணர்வுச் சுற்றுலா பள்ளி மாணவ, மாணவியர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 150 மாணவ, மாணவியர்கள் இந்த விழிப்புணர்வுச் சுற்றுலாவில் கலந்து கொண்டனர். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் மொத்தம் 4800 மாணவ, மாணவியர்களும் 200 ஆசிரியர்களும் இதில் பங்குபெற்றனர். சுற்றுலாவில் கலந்து கொண்ட அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் பைகள், தொப்பிகள், உணவு, தின்பண்டங்கள் மற்றும் குடிநீர் ஆகியவை வழங்கப்பட்டன. அவர்கள் சரித்திரப் புகழ் பெற்ற இடங்கள், அருங்காட்சியகங்கள், கடற்கரைப் பகுதிகள் முதலிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு வினாடி வினாப் போட்டிகள் நடத்தப்பட்டதில் மாணவ, மாணவியர்கள் ஆர்வமுடன் கலந்துகொண்டனர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

மாநில அளவிலான உலக சுற்றுலா தின விழா 26.09.2018 மற்றும் 27.09.2018 ஆகிய நாட்களில் மதுரையில் ரூ.25.00 இலட்சம் செலவில் கொண்டாடப்பட்டது.

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் புதிய கட்டடம் கட்டுவதற்கும் பழைய கட்டிடத்தை பழுதுபார்த்து புதுப்பிப்பதற்கும் ரூ.2.57 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

தூத்துக்குடி மாவட்டம், பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள கட்டபொம்மன் நினைவுக்கோட்டையை புனரமைத்து மேம்படுத்த ரூ.60.20 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

கிருஷ்ணகிரி, ஒசூர், ஒகேனக்கல், உதகமண்டலம், மதுரை (அலகு II), திருச்செந்தூர் மற்றும் கொடைக்கானல் ஆகிய இடங்களிலுள்ள ஓட்டல் தமிழ்நாடு வளாகங்களில் கூடுதல் வசதிகள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள ரூ.1.41 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

சேலம் மாவட்டத்திலுள்ள ஏற்காடு படகு குழாமில் கூடுதல் வசதிகள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள ரூ.75.00 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

நீலகிரி மாவட்டம், பைக்காரா படகு இல்லத்தில் துருப்பிடிக்காத இரும்பு கைப்பிடியுடன் கூடிய வலுவூட்டப்பட்ட சிமென்ட் கான்கிரீட் படிகள் அமைக்க ரூ.37.50 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்**

நமது மாநிலத்தில் உள்ள அனைத்து முக்கிய சுற்றுலாத்தலங்களில் ஓட்டல்கள் நிறுவுதல், பல்வகையான சுற்றுலாக்கள் நடத்துதல், படகு குழாம்கள் நடத்துதல், இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை நடத்துதல் போன்ற சுற்றுலா சேவைகளை வழங்கிடும் நோக்கத்துடன், **30.06.1971** அன்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தொடங்கப்பட்டது. இக்கழகத்தின் கீழ், **53** தங்கும் விடுதிகளும், **12** சொகுசுப் பேருந்துகளும் உள்ளன. இக்கழகம் உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு போன்ற மலைவாழ் சுற்றுலாத் தலங்களில் மாணவர்கள் மற்றும் குறைந்த வருவாய் உள்ள சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்திட, இளைஞர் தங்கும் விடுதிகளை நடத்துகிறது. சில ஓட்டல்கள் குத்தகை / உரிமத்திற்கு விடப்பட்டும், மற்றவை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தாலும் நிருவகிக்கப்படுகின்றன.

**ஓட்டல்கள் பிரிவு**

சுற்றுலாப் பயணிகள் / விருந்தினர்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் தேவைகளை நிறைவேற்றும் வகையில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தனது நிர்வாகத்தின் கீழுள்ள அனைத்து ஓட்டல்களின் தரத்தையும் மேம்படுத்துவதற்கான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலுள்ள இரண்டு உணவக மேலாண்மை நிறுவனங்கள் மற்றும் குறிப்பிட்ட நட்சத்திர ஓட்டல்கள் ஆகியவற்றின் வாயிலாக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களின் மேலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. நிலையான சுற்றுலாப் பயிற்சி திட்டம் ஓட்டல் தமிழ்நாடு, மதுரை –அலகு II ல் 07.07.2018 மற்றும் 08.07.2018 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டது.

**படகு குழாம்கள்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், முட்டுக்காடு, முதலியார்குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம் மற்றும் குற்றாலம் ஆகிய இடங்களில் படகு குழாம்களை இயக்கி வருகிறது.

## படகு குழாம், முட்டுக்காடு

சென்னையிலிருந்து **36** கி.மீ. தொலைவில் மாமல்லபுரம் செல்லும் சாலையில் முட்டுக்காட்டில் வங்காள விரிகுடாவின் உப்பங்கழி அமைந்துள்ளது. கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள இவ்விடத்தில் முட்டுக்காடு படகு குழாம் அமைந்துள்ளது. இங்கு இயந்திரப் படகுகள், துடுப்புப் படகுகள், விரைவுப் படகுகள் மற்றும் வாட்டர் ஸ்கூட்டர்கள் என மொத்தம் **37** படகுகள் உள்ளன. முட்டுக்காடு படகு குழாமில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் உணவகமும் செயல்பட்டு வருகிறது. வார இறுதி நாட்களில் இந்த படகு குழாமிற்கு சுமார் **4,000**க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். முட்டுக்காடு படகு குழாம் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது. இப்படகு குழாமிற்கு இரண்டு புதிய வாட்டர் ஸ்கூட்டர்கள் **27.02.2019** அன்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் வாங்கப்பட்டுள்ளன.

**படகு குழாம், முதலியார்குப்பம்**

கிழக்கு கடற்கரைச் சாலையில், வங்காள விரிகுடாவின் உப்பங்கழியையொட்டி முதலியார்குப்பம் எனும் இடத்தில் படகு குழாம் அமைந்துள்ளது. இவ்விடம் மிகவும் ரம்மியமான சூழலில் புலம் பெயரும் பறவைகள் மற்றும் வாத்துக்களுக்குப் புகலிடமாக உள்ளது. இந்தப் படகு குழாமை 'மழைத்துளி படகு குழாம்' என்றும் அழைப்பர். நீர் விளையாட்டு வசதிகள் கொண்ட முதலியார்குப்பம் படகு குழாம், சென்னையிலிருந்து கிழக்கு கடற்கரைச் சாலையில் 92 கி.மீ. தொலைவிலும் மாமல்லபுரத்திலிருந்து 36கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. ஓடியூர் ஏரியின் உப்பங்கழி நீர்நிலையையொட்டி அமைந்துள்ள இந்த படகு குழாமை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேம்படுத்தியுள்ளது. இங்கு துடுப்புப் படகுகள், மிதி படகுகள், ஓரிருக்கை 'கயாக்' படகுகள், வாழைப்பழ வடிவ படகுகள், வாட்டர் ஸ்கூட்டர் மற்றும் விசைப்படகுகள் என மொத்தம் 34 படகுகள் உள்ளன. ஓடியூர் ஏரியை ஒட்டியுள்ள கடற்கரைத் தீவிற்கு இந்தப் படகு குழாம் மூலம் சென்று வர ஏற்பாடு செய்து தரப்படுகிறது. சுற்றுலாப் பயணிகள் இந்தத் தீவில் சில மணி நேரம் தங்கி, இயற்கைச் சூழலை கண்டுகளிக்க வசதியாக, அங்கு கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், அங்கு

அமைந்துள்ள உணவகத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கு குளிர்பானங்கள் மற்றும் சிற்றுண்டி வகைகள் கிடைக்கும். முதலியார்குப்பம் படகு குழாம் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

**படகு குழாம், உதகமண்டலம்**

àî¬è நகரின் நடுவே அமைந்துள்ள உதகமண்டலம் ஏரி சுற்றுலாப் பயணிகளைக் கவரும் ஒரு முக்கிய சுற்றுலாப் பகுதியாகும். உதகமண்டலம் ஏரி சுமார் 85 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்த ஏரியில் படகு சவாரியே பிரதான சுற்றுலா ஈர்ப்பாக உள்ளது. இந்தப் படகு குழாமில் மிதி படகுகள், துடுப்புப் படகுகள் மற்றும் விசைப் படகுகள் என மொத்தம் 133 படகுகள் உள்ளன. இங்குள்ள அழகான பூங்காவும் சிறியரக தொடர் வண்டி வசதியும் படகு குழாமிற்கு மேலும் மெருகூட்டுகின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்காக படகு தளத்தில் தற்போது புதிய துருப்பிடிக்காத இரும்பு கைப்பிடி கம்பிகள் அமைத்துள்ளது. மேலும், சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக 17.12.2018 முதல் படகு குழாமில் சுற்றுச் சூழலுக்கு உகந்த உலர் கழிவறைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

**படகு குழாம், பைக்காரா**

உதகமண்டலத்தில் இருந்து உதகை – மைசூர் சாலையில், 21 கி.மீ. தொலைவில் எழில் கொஞ்சும் சூழலில் பைக்காரா ஏரி அமைந்துள்ளது. முக்குருத்தி மலை முகட்டிலிருந்து பைக்காரா ஆறு உற்பத்தியாகிறது. சுற்றுலாப் பயணிகள் ரசித்து மகிழும் சுற்றுலா மையமாக இந்த ஏரி அமைந்துள்ளது.

பைக்காரா நீர்த்தேக்கத்தில் அமைந்துள்ள இப்படகு குழாம், சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவரும் கூடுதல் அம்சமாக அமைந்துள்ளது. இங்கு இயந்திரப் படகுகள், அதிவேகப் படகுகள் என மொத்தம் 25 படகுகள் மற்றும் உணவகம் ஆகியவை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இயக்கப்படுகின்றன. சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக இப்படகு குழாமில் தற்பொழுது சுற்றுச் சூழலுக்கு உகந்த உலர் கழிப்பறை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

**படகு குழாம், கொடைக்கானல்**

கொடைக்கானல் ஏரி சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் ஒரு மையமாக அமைந்துள்ளது. இது ஒரு நட்சத்திர

வடிவிலான ஏரி ஆகும். இது கொடைக்கானல் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் **3** கி.மீ. தொலைவில் **59** ஏக்கர் நிலப்பரப்பில் செயற்கையாக வடிவமைக்கப்பட்ட பரந்து விரிந்துள்ள ஏரியாகும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இங்கு இரண்டு படகு குழாம்களை நடத்துகிறது. இங்கு துடுப்புப் படகுகள், மிதி படகுகள் மற்றும் சிக்காரா படகுகள் என மொத்தம் **112** படகுகள் உள்ளன. மேலும், சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக இரண்டு உலர் கழிவறைகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் தற்பொழுது அமைக்கப்பட்டுள்ளன.

**படகு குழாம், ஏற்காடு**

கிழக்குத் தொடர்ச்சி மலையில், சேர்வராயன் மலைத் தொடரில் ‘தென்னகத்தின் ஆபரணம்’ என அழைக்கப்படும் ஏற்காடு அமைந்துள்ளது. சுற்றுலாப் பயணிகளை கவரும் முக்கிய சுற்றுலா மையமான ஏற்காட்டில், நகரப் பேருந்து நிலையம் அருகில் **28.40** ஏக்கர் பரப்பளவில் சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கும் விதமாக ஏற்காடு ஏரி அமைந்துள்ளது. இது சேலம் இரயில் நிலையத்திலிருந்து **38** கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு மிதி

படகுகள், துடுப்புப் படகுகள் மற்றும் விசைப்படகுகள் என மொத்தம் 55 படகுகள் உள்ளன.

**படகு குழாம், பிச்சாவரம்**

கடலூர் மாவட்டம், சிதம்பரம் அருகில் அமைந்துள்ள பிச்சாவரம் உலகின் இரண்டாவது பெரிய சுரபுன்னைக் காடுகள் ஆகும். பிச்சாவரம் படகு குழாம் சுமார் 5.27 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இப்பகுதி கடலிலிருந்து மணல் திட்டுக்களால் பிரிக்கப்பட்டுள்ளது. சுரபுன்னைக் காடுகள் கொண்ட இவ்விடத்தில், âŠ«ð£¶‹ குறைந்த அளவில் நீர் இருந்து கொண்டே இருக்கும். இங்கு துடுப்புப் படகுகள் மற்றும் இயந்திரப் படகுகள் என மொத்தம் 53 படகுகள் உள்ளன.

**படகு குழாம், குற்றாலம்**

'தென்னகத்தின் நீரூற்று' என்று அழைக்கப்படும் குற்றாலம், மேற்குத் தொடர்ச்சி மலையில் அழகுற அமைந்துள்ளது. குற்றாலம் படகு குழாமில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஜுன், ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாத பருவ காலத்தின் போது, சுற்றுலாப் பயணிகளுக்காக படகு சவாரி வசதிகள் செய்யப்படுகின்றன. இங்கு துடுப்புப்

படகுகள், மிதி படகுகள் மற்றும் கயாக் படகுகள் என மொத்தம் 28 படகுகள் உள்ளன.

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், அனைத்து படகு குழாம்களிலும் படகு சவாரியின் போது சுற்றுலாப் பயணிகள் உயிர்க்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவி மூலம் படகு குழாம்களின் பயன்பாட்டிற்காக பல்வேறு புதிய படகுகள் வாங்குவதற்கான நடவடிக்கைகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தொலைநோக்கி இல்லம்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் உதகையில் தொட்டபெட்டாவிலும், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய இடங்களிலும் தொலைநோக்கி இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. தொட்டபெட்டா தொலைநோக்கி இல்லத்தில் சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்காக மேலும் இரண்டு தொலைநோக்கி கருவிகள் சமீபத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

தொட்டபெட்டா தொலைநோக்கி இல்லத்தில் புதியதாக ஒரு சிற்றுண்டி கூடம் கட்டுவதற்கு வனத்துறை மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**போக்குவரத்து பிரிவு**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 12 சொகுசுப் பேருந்துகளைக் கொண்டு அரை நாள் முதல் 14 நாட்கள் வரையிலான பல்வேறு சுற்றுலாக்களை நடத்தி வருகிறது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பயனடைவதற்காக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 38 சுற்றுலாக்களை நடத்தி வருகிறது. இந்த சுற்றுலாக்களில் திருப்பதி சுற்றுலா, 3 நாட்கள் நவக்கிரக சுற்றுலா, 8 நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா மற்றும் 8 நாட்கள் கிழக்கு–மேற்கு கடற்கரைச் சுற்றுலா ஆகியவை சுற்றுலாப் பயணிகளிடையே மிகவும் பிரபலமானதாகும். இச்சுற்றுலாக்களைத் தவிர, குழுவாகச் செல்ல விரும்பும் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்வதற்காக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அவர்களுக்கேற்ற ஆயத்த சுற்றுலாக்களையும் அரசு ஊழியர்களுக்கான விடுப்புப் பயணச் சலுகை சுற்றுலாக்களையும் ஏற்பாடு செய்கிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 2015 ஜுன் திங்கள் முதல், திருமலை திருப்பதி தேவஸ்தானத்திடமிருந்து நாள்தோறும் விரைவு தரிசனத்திற்கான 150 அனுமதிச் சீட்டுளைப் பெற்று வாரத்தின் ஏழு நாட்களிலும் விரைவு தரிசன வசதிகளை செய்து தருகிறது.

**பொருட்காட்சி பிரிவு**

சென்னை தீவுத்திடலில் 09.01.2019 அன்று 45வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த ஆண்டு '**சுற்றுலா மற்றும் டிஜிட்டல் உருமாற்றம்' (Tourism and the Digital Transformation)** என்ற மையக் கருத்தைக் கொண்டு பொருட்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டன.

மேற்கண்ட மையக்கருத்தின் அடிப்படையில், அனைத்து அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் சார்பில் மாநில அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை வெளிப்படுத்தும் வகையில் கண்கவர் செய்முறை மாதிரிகளையும் எல்.இ.டி திரைகளையும் கொண்டு பல அரங்குகள் அமைக்கப்பட்டன.

இந்த ஆண்டு நடைபெற்ற **45**வது சுற்றுலாப் பொருட்காட்சியில் முதன் முறையாக தமிழ்நாடு சிறைத்துறை பங்கேற்றது. அத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட அரங்கம், சிறைத்துறை தொடர்பான செயல்பாடுகள் குறித்து மக்களின் கவனத்தை ஈர்த்து விழிப்புணர்வை ஏற்படுத்தியது. மேலும், அவ்வரங்கில் சிறைவாசிகளால் தயாரிக்கப்பட்ட காலணிகள், எண்ணெய் வகைகள், இனிப்பு வகைகள், துணி வகைகள் மற்றும் தரமான தின்பண்டங்கள் மலிவான விலையில் விற்பனை செய்யப்பட்டன. அதனால், இந்த அரங்கம் பொது மக்களின் அமோக வரவேற்பினைப் பெற்றது.

இதுதவிர, சென்னை மண்டலத்திலுள்ள தமிழ்நாடு சட்டப்பணிகள் ஆணைக்குழுவும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் பொதுமக்களுக்கான இலவச சட்ட ஆலோசனைகளை வழங்க வழக்குரைஞர்களுடன் கூடிய ஓர் அரங்கம் அமைத்து சட்ட ஆலோசனைகளை வழங்கியது.

இந்த ஆண்டு பொருட்காட்சி மைதானத்தின் உட்பகுதியில் பார்வையாளர்களின் வசதிக்காக ரூ.**50.87** இலட்சம் செலவில் புதிய தார் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பார்வையாளர்கள் கண்கவரும் வகையில் பொருட்காட்சி மைதானத்தில் **‘பரந்த புல்வெளியுடன் கூடிய**

**செயற்கை நீரூற்று'** ரூ.**46.00** இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சந்தைப்படுத்தும் (விற்பனை) முயற்சிகள்

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களில் 'விடுமுறை இல்ல வசதி' திட்டத்தின்கீழ் தங்குவதற்கு வசதிகள் செய்யப்படுகிறது. இதன் மூலம் ஏர் இந்தியா நிறுவனத்துடன் கடன் அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ஏப்ரல் திங்கள் 2018 முதல் மார்ச் திங்கள் 2019 வரை ரூ.12.13 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களில் 'விடுமுறை இல்ல வசதிகள்' மூலம் தங்குவதற்கு, கீழ்க்கண்ட நிறுவனங்களுடன் 'முன் வைப்புத் தொகை அறை ஒதுக்கும் திட்டம்' மூலம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், வைப்புத் தொகையாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்,

ரூ.**180.00** இலட்சம் அளவில் வருவாய் ஈட்டியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

| **நிறுவனத்தின் பெயர்** | **தொகை (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|
| மத்திய கலால் துறை, மதுரை | 30.00 |
| தொழிலாளர் மாநில ஈட்டுறுதிக் காப்பீட்டுக் கழகம், சென்னை | 70.00 |
| தொழிலாளர் மாநில ஈட்டுறுதிக் காப்பீட்டுக் கழகம், மதுரை | 30.00 |
| தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம், நாகர்கோவில் | 50.00 |
| மொத்தம் | **180.00** |

**விடுமுறைக் கால முன் வைப்புத்தொகை திட்டம்**

மதுரையில் உள்ள மத்திய கலால் துறை ரூ.**30.00** இலட்சத்தை, முன்வைப்புத் தொகையாக வழங்கியுள்ளது. இதற்காக அத்துறைக்கு கொடைக்கானல் ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் இரு படுக்கை வசதி கொண்ட இரண்டு அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

சென்னை, நுங்கம்பாக்கத்திலுள்ள தொழிலாளர் மாநில ஈட்டுறுதிக் காப்பீட்டுக் கழகம் ரூ.**70.00** இலட்சத்தை (உதகமண்டலம், ஓட்டல் தமிழ்நாடு விடுதிக்கு

ரூ.35.00 இலட்சம், கன்னியாகுமரி, ஓட்டல் தமிழ்நாடு விடுதிக்கு ரூ.35.00 இலட்சம்) 01.05.2017 முதல் 30.04.2020 வரையிலான 3 ஆண்டு காலத்திற்கு முன்வைப்புத் தொகையாக கொடுத்துள்ளது. இதற்காக உதகமண்டலம் மற்றும் கன்னியாகுமரி ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் தலா இரு படுக்கை வசதி கொண்ட இரண்டு அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

மதுரையிலுள்ள தொழிலாளர் மாநில ஈட்டுறுதிக் காப்பீட்டுக் கழகம் ரூ.30.00 இலட்சத்தை 03.07.2017 முதல் 02.07.2020 வரையிலான 3 ஆண்டுகாலத்திற்கு முன்வைப்புத்தொகையாக கொடுத்துள்ளது. இதற்காக கொடைக்கானல் ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் இரு படுக்கை வசதி கொண்ட இரண்டு அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

நாகர்கோவிலிலுள்ள தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் ரூ.50.00 இலட்சத்தை, 06.12.2017 முதல் 05.12.2020 வரையிலான 3 ஆண்டு காலத்திற்கு முன்வைப்புத் தொகையாக கொடுத்துள்ளது. இதற்காக கன்னியாகுமரி ஓட்டல் தமிழ்நாடு விடுதியில், அந்நிறுவனத்திற்கு இரு படுக்கை வசதி கொண்ட குளிர்சாதன வசதி இல்லாத

இரண்டு அறைகள் மற்றும் ஒரு குடும்ப அறை ஒதுக்கப்பட்டுள்ளன.

இதைப்போன்றே மிகவும் பிரசித்தி பெற்ற பல நிறுவனங்கள் தங்களின் ஆலோசனைக் கூட்டங்கள்/ கருத்தரங்குகளை மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரை ஒய்வு வளாகத்தில் நடத்திட உரிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்கள், சுற்றுலாக்கள் மற்றும் படகு குழாம்களில் விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்தோடு ‘சந்தைப்படுத்தும் பிரிவு’ ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இப்பிரிவின் மூலம் வருவாயை அதிகப்படுத்தும் விதமாக பள்ளிகள், கல்லூரிகள், அரசு அலுவலகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள், பொருட்காட்சி நடக்கும் இடங்கள் மற்றும் பொது இடங்களான கடற்கரை, பூங்கா, கோவில்கள் போன்ற இடங்களிலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் நடத்தப்படும் சுற்றுலாக்கள், தங்கும் விடுதிகள், படகு குழாம்கள் ஆகியவற்றின் விவரங்களை சந்தைப்படுத்தி வருவாய் ஈட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மின்ஆளுமை முயற்சிகள்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 'இணைய வழி உடனிகழ் முன்பதிவு' (Online Real Time Reservation System) முறையினை அறிமுகப்படுத்தி சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்படும் அனைத்து தமிழ்நாடு ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாக்களை உடனிகழ் அடிப்படையில் (Real Time Reservation Basis) முன்பதிவு செய்து கொள்ளும் முறையினை உருவாக்கி சுற்றுலாவிற்கு மின் ஆளுமை (E-Governance) ஏற்படுத்திய நிறுவனம் என்ற பெயரை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பெற்றுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வருவாய் ஒவ்வொரு வருடமும் இணையதள வசதி மூலம் அதிகரித்து வருகிறது. **2018–19**ஆம் ஆண்டில் இணையதள முன்பதிவு மூலம் ஈட்டிய வருவாய் ரூ.**14.00** கோடி. இதற்கு முந்தைய ஆண்டு ஈட்டிய வருவாய் ரூ.**12.80** கோடி.

**'மெய்நிகர் சுற்றுலா'** (Virtual Tours) என்ற புதிய மென்பொருள் தமிழ்நாட்டிலுள்ள சிறப்புமிக்க **46** சுற்றுலாத்

தலங்களின் மெய் காட்சியை பார்க்கும் வண்ணம், இணையதளம் மூலம் **360** டிகிரி கோணத்தில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கும் அனைத்து விற்பனை பிரிவுகளிலும் '**மையப்படுத்தப்பட்ட முன்பதிவு முறை**' (Centralized Reservation System) என்ற மென்பொருள் செயல்படுத்தப்பட்டு, அதன்மூலம் சுற்றுலாப் பயணிகள் எந்த விற்பனை பிரிவுகளிலும் சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகள், சுற்றுலாக்களுக்கு முன்பதிவு செய்ய வழிவகை செய்து சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கும் அனைத்து ஓட்டல்களிலும் 'ஓட்டல் நிர்வாக மென்பொருள்' (Hotel Management System) நிறுவப்பட்டு, அதன்மூலம் சுற்றுலாப் பயணிகளின் வருகை, புறப்பாடு மற்றும் இதர பயன்பாடுகள் அந்தந்த ஓட்டல்களில் எல்லா நேரங்களிலும் கணக்கீடு செய்ய நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கும் படகு இல்லங்களான உதகமண்டலம், பிச்சாவரம், ஏற்காடு, கொடைக்கானல்–I மற்றும் கொடைக்கானல்–II ஆகியவற்றில், சுற்றுலாப் பயணிகள் தங்களின் படகு சவாரியின் கால அளவினை அறியும் வண்ணம் 'புதிய படகு குழாம் நிர்வாக மென்பொருள்' வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் படகு சவாரி செய்ய வழங்கப்படும் பயணச் சீட்டுகளில் முறைகேடுகள் நடைபெறாமல் தடுக்கவும், படகுகளின் இருப்பு விவரங்களை தெரிந்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களான கன்னியாகுமரி, திருச்சி, தஞ்சாவூர், திருச்செந்தூர், ஏற்காடு, ஒகேனக்கல், காஞ்சிபுரம் மற்றும் இராமேஸ்வரம் ஆகிய எட்டு ஓட்டல்களுக்கு **2018–2019**ம் ஆண்டு முதல் சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்காக 'அருகலை' (Wi-fi) வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**2018–2019**ம் ஆண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னையில் நடத்திய இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் பார்வையாளர்களுக்கு நுழைவுச்

சீட்டு மற்றும் சிறியரக தொடர்வண்டி பயணச்சீட்டுகளை இணையவழி (Online) மூலம் முன்பதிவு செய்து கொள்ளும் முறை அறிமுகப்படுத்தியுள்ளது.

தற்போதைய சுற்றுலாத் தகவல்கள் மற்றும் நிகழ்வுகளை சுற்றுலாப் பயணிகளிடம் பகிர்ந்து கொள்ளும் வண்ணம் சமூக வலைதளங்களான facebook, Twitter, YouTube மற்றும் Instagram ஆகியவை மூலம் 'டிஜிட்டல் சந்தைப்படுத்துதல்' (Digital Marketing) என்ற முறை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த முறையின் மூலம் **2018–2019**ம் ஆண்டில் சுற்றுலா நிகழ்வுகள் 'முகநூல்' (facebook) மூலம் பதிவு செய்யப்பட்டு அவை **1.30** கோடி மக்களைச் சென்றடைந்துள்ளது.

**பங்கு ஈவுத்தொகை**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் **2017–2018**ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் **30** விழுக்காடு பங்கு ஈவுத் தொகையான ரூ.**3.12** கோடிக்கான காசோலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் **18.01.2019** அன்று வழங்கப்பட்டது.


## முடிவுரை

சுற்றுலாவை முனைப்புடன் மேம்படுத்த தேவையான புதிய முயற்சிகள் மற்றும் உத்திகள் மாநில சுற்றுலாத் துறையால் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்த பல்வேறு சுற்றுலா நிறுவனங்கள் மற்றும் சுற்றுலாத் தொழில்புரிவோர் ஆகியோர் சுற்றுலாத்துறையுடன் இணைந்து முனைப்புடன் பணியாற்றி வருகின்றனர். இந்த முயற்சி மேலும் வலுப்படுத்தப்படும். தேசிய அளவிலும் பன்னாட்டு அளவிலும் மிகவும் விரும்பி செல்லக்கூடிய சுற்றுலா மையமாக தமிழ்நாடு விளங்கும் வகையில் அனைத்து நடவடிக்கைகளும் சுற்றுலாத்துறையால் மேற்கொள்ளப்படும்.

**வெல்லமண்டி ந. நடராஜன்**
சுற்றுலாத்துறை அமைச்சர்


# இணைப்பு - 1

## சுற்றுலாத்துறை நிருவாக அமைப்பு



# இணைப்பு–2

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிருவாக அமைப்பு



# இணைப்பு - 3

## சுற்றுலா அலுவலகங்கள்

## தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா அலுவலகங்கள்

| | | |
|---|---|---|
| 1. அரியலூர் | 12. மதுரை | 23. திருவண்ணாமலை |
| 2. சென்னை | 13. மாமல்லபுரம் | 24. திருவள்ளூர் |
| 3. கோயம்புத்தூர் | 14. நாமக்கல் | 25. திருவாரூர் |
| 4. சிதம்பரம் | 15. பூம்புகார் | 26. தேனி |
| 5. தர்மபுரி | 16. புதுக்கோட்டை | 27. தூத்துக்குடி |
| 6. ஈரோடு | 17. பெரம்பலூர் | 28. திருப்பூர் |
| 7. காரைக்குடி | 18. இராமேஸ்வரம் | 29. உதகமண்டலம் |
| 8. கன்னியாகுமரி | 19. சேலம் | 30. வேலூர் |
| 9. கொடைக்கானல் | 20. திருச்சிராப்பள்ளி | 31. விருதுநகர் |
| 10. கிருஷ்ணகிரி | 21. திருநெல்வேலி | 32. விழுப்புரம் |
| 11. கரூர் | 22. தஞ்சாவூர் | |

## வெளிமாநிலங்களிலுள்ள சுற்றுலா அலுவலகங்கள்

1. ஆக்ரா
2. ஜெய்ப்பூர்
3. கொல்கத்தா
4. மும்பை
5. புது தில்லி
6. பனாஜி (கோவா)

# இணைப்பு - 4

## சுற்றுலா தகவல் மையங்கள்

## தமிழ்நாட்டில் அமைந்துள்ளவை

| விமான நிலையத்தில் அமைந்துள்ளவை | இரயில் நிலையத்தில் அமைந்துள்ளவை |
|---|---|
| 1. சென்னை (பன்னாட்டு முனையம்)<br>2. சென்னை (உள்நாட்டு முனையம்)<br>3. கோயம்புத்தூர்<br>4. மதுரை<br>5. திருச்சிராப்பள்ளி<br>6. தூத்துக்குடி<br>7. சேலம் | 1. சென்னை (எழும்பூர்)<br>2. கோயம்புத்தூர்<br>3. மதுரை<br>4. திருச்சிராப்பள்ளி<br>5. திருநெல்வேலி |
| **பேருந்து நிலையத்தில் அமைந்துள்ளவை** | **பிற இடங்களில் அமைந்துள்ளவை** |
| **1.** சென்னை (கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம்) | **1.** கூடலூர் (நீலகிரி மாவட்டம்)<br>**2.** இராமேஸ்வரம் (கோவில் வளாகம்)<br>**3.** தஞ்சாவூர் (ஓட்டல் தமிழ்நாடு)<br>**4.** பாஞ்சாலங்குறிச்சி (தூத்துக்குடி மாவட்டம்) |

## சுற்றுலா தகவல் மையங்கள்

## வெளிமாநிலங்களில் அமைந்துள்ளவை

| வ.எண். | இடம் | மாநிலம் |
|---|---|---|
| 1. | பெங்களூரு இரயில் நிலையம் | கர்நாடகம் |
| 2. | ஐதராபாத் | தெலுங்கானா |
| 3. | திருவனந்தபுரம் | கேரளா |
| 4. | அகமதாபாத் | குஜராத் |
| 5. | புவனேசுவரம் | ஒடிசா |

# புகைப்படங்கள்




இந்தியா டுடே குழுமம் தமிழக சுற்றுலாவின் சிறந்த சேவைக்காக வழங்கிய விருதினை மாண்புமிகு இந்திய குடியரசு துணைத் தலைவரிடமிருந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் நவம்பர் 2018ல் புதுதில்லியில் பெற்றுக் கொண்டார்





**45**வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி **2018–2019**




சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு–2019



இந்திய நாட்டிய விழா 2018–2019, மாமல்லபுரம்



ஆயிரங்கால் மண்டபம், மீனாட்சி அம்மன் கோயில், மதுரை



அரசு அருங்காட்சியகம், சென்னை



மாரியம்மன் கோயில், சமயபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்



வேளாங்கண்ணி தேவாலயம்



ஐந்தருவி, குற்றாலம்


T.T.D.C
GOVT OF TAMIL NADU
tamil nadu tourism
Govt. Of Tamil Nadu
TN 01 BH 6768
DEVELOPMENT CORPORATION LTD.

வோல்வோ பேருந்து



மனோரா, தஞ்சாவூர்



நாகூர் தர்கா




டாக்டர். ஆ.ப.ஜெ.அப்துல் கலாம் தேசிய நினைவகம், இராமேஸ்வரம்



வால்பாறை